**செய்தி வெளியீடு எண்: 795** **நாள்: 24.9.08**

# பத்திரிகைச் செய்தி

பொதுமக்களுக்கு உயர்தரமான சேவையை வழங்குவதை லட்சியமாகக் கொண்டு போக்குவரத்துத்துறை செயல்பட்டு வருகின்றது. சாலையை பயன்படுத்துபவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டும், விபத்துக்களை தவிர்க்கவும் அரசு சாலை பாதுகாப்புக் கொள்கையை உருவாக்கியுள்ளது. மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரை தலைவராகக் கொண்டு மாநில அளவில் அரசுக்கு சாலை பாதுகாப்பு குறித்த கொள்கைகள், திட்டங்கள் குறித்து அரசுக்கு அறிவுரை வழங்கிட மாநில சாலைப் பாதுகாப்புக் குழு என்கிற உயர்நிலை குழு மாநில அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு பிற துறைகளில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து ஆய்வு செய்து , கொள்கைகள் தொடர்பான ஆலோசனைகளை அரசுக்கு அளிக்கிறது.

இக்குழு காவல், போக்குவரத்து மற்றும் பிற துறை அலுவலர்களை கூடுதலாக சேர்த்து ஜுலை 2007ல் மறுசீரமைப்பு செய்யப்பட்டது. மறுசீரமைப்புக்குப் பின்பு இக்குழுவின் 3வது கூட்டம் இன்று (24.09.2008) தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலர், உள்துறை செயலர், போக்குவரத்துத்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை மாநகராட்சி, சாலை போக்குவரத்து நிறுவனம், காவல் துறை, மருத்துவ மற்றும் ஊரக நலப்பணிகள் துறை, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆகிய துறையைச் சார்ந்த இயக்குனர்கள், ஆணையர்கள் கலந்து கொண்டனர்.

இக்குழுவின் உறுப்பினர் செயலரும் போக்குவரத்துத்துறை ஆணையர் அவர்கள், மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை நிகழ்த்தினார். அதன் பின்னர், இத்துறையின் விவரங்களை உறுப்பினர்களுக்கு விளக்கினார்.

மேற்படி கூட்டத்தில் முக்கிய அம்சமாக சாலை விபத்தில் இறப்போரின் எண்ணிக்கையினை குறைக்கும் பொருட்டு அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளைப்பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. முக்கியமாக மாவட்ட வாரியாக நடைபெற்ற சாலை விபத்துகளின் தகவல்களை ஆய்வு செய்து, ஆய்வில்

கண்டறியப்பட்ட விபத்துக் காரணங்களை குறித்து விரிவாக விவாதித்து விபத்துக்கான காரணங்கள் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டு காணப்படுவதால் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாதம் ஒருமுறை கூட்டப்படும் மாவட்ட சாலை பாதுகாப்புக் குழுவில் சாலைபாதுகாப்பு குறித்து விரிவாக விவாதித்து, விபத்திற்கான அடிப்படை காரணங்கள் கண்டறியப்பட்டு தக்க விபத்து தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

மேலும் இரவு நேரங்களில் நெடுஞ்சாலையில் சாலை ஓரமாக முறையின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் வாகனங்களினால் ஏற்படும் விபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு நெடுஞ்சாலைகளில் ரோந்து பணியில் ஈடுபட்டு வரும் காவலர் குழுக்கள் தனி கவனம் செலுத்தி சாலைவிபத்துக்கள் நடைபெறாவண்ணம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது.

வாகன ஓட்டுனர்கள் மதுஅருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால் விபத்துக்கள் ஏற்படுவதை தடுக்க தற்போது சென்னை மாநகர எல்லைக்குள் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டும் வாகன ஓட்டுனர்கள் மீது சுவாச ஆல்கஹால் பரிசோதனை செய்து நடவடிக்கை மேள்கொள்வது போன்று புறநகரப் பகுதிகளிலும் மேற்கண்ட நடவடிக்கையினை தீவிரப்படுத்தலாம் என்றும், புறநகரங்களிலிருந்து வரும் வாகனங்களை சுங்கச்சாவடியில் (Toll gate) பரிசோதனை செய்து ஓட்டுநர் மது அருந்தவில்லை என்பதை உறுதி செய்த பின்னர் மேற்படி வாகனத்தை தொடர்ந்து பயணிக்க அனுமதி அளிக்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

உரிய வாகன ஓட்டுனர் உரிமம் இல்லாமல் வாகனம் ஓட்டும் நபர்கள் மீது தற்போது எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டது.

சென்னை மாநகரத்தில் உள்ள போக்குவரத்து அலுவலகங்களில் தற்போதுள்ள போதிய இடவசதியின்மையினை கருத்தில் கொண்டு சாலை போக்குவரத்து நிறுவனத்தில் அமைந்துள்ள பயிற்சி தளத்தில் அனைத்துத்தர வாகன ஓட்டுனர் திறன் பரிசோதனை செய்து அம்மையத்திலேயே ஓட்டுனர் உரிமம் வழங்க ஆவண செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சென்னை மாநகரத்தில் வணிக வளாக மையங்கள் அமைந்திருக்கும் தியாகராய நகர், மைலாப்பூர், புரசைவாக்கம், பூக்கடை ஆகிய நெரிசல் மிகுந்த இடங்களில்

போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு சுற்றுத்தட பேருந்துகளை அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக அறிமுகப்படுத்தலாமென தீர்மானிக்கப்பட்டது.

நகர எல்லைக்குள் இருக்கும் சாலைகளிலும் வாகன நிறுத்தம் செய்யும் இடங்களை முறைப்படுத்திட நடவடிக்கை எடுக்குமாறும் காவல்துறையினர் அறிவுறுத்தப்பட்டனர்.

சாலை பாதுகாப்பு குறித்து கூட்டத்தில் எடுக்கப்பட்ட அனைத்து முடிவுகளையும், கருத்துக்களையும் நடைமுறைப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி இணைப் போக்குவரத்து ஆணையர் (சாலை பாதுகாப்பு) நன்றியுரை தெரிவித்து கூட்டம் நிறைவுற்றது.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**